# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 004/மா/2018 –

ஆணை எண். 21/2018

நாள் : 09/02/2018

திரு T. ராஜமாணிக்கம்,
திருநெல்வேலி. – முறையீட்டு மனுதாரர்

பிரியா கண்ணன்,
சென்னை – 600 118. – எதிர் மனுதாரர்

திருநெல்வேலி, சுத்தமல்லி, பெரியார் நகர், எண்.463, K.M. காம்ப்ளக்ஸ், முகவரியில் வசிக்கும் திரு T. ராஜாமணிக்கம் அவர்களின் 02.01.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 03.01.2018 அன்று பெறப்பட்டு, 004/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் சாட்சியாக குறிப்பிடப்பட்ட திரு A.திருமலைக்குமார் என்பவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருநெல்வேலி, சுத்தமல்லி, பெரியார் நகர், எண்.463, K.M. காம்ப்ளக்ஸ், முகவரியில் வசிக்கும் திரு T. ராஜாமணிக்கம் என்பவர், கே.டி.வி. ஹெல்த் புட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்குச் சொந்தமான பிரியா கண்ணன் டிரான்ஸ்போர்ட் என்ற நிறுவனம் குறித்து கீழ்க்காணும் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி முறையீடு செய்துள்ளார்:-

| | |
|---|---|
| (1) | பிரியா கண்ணன் என்ற டிரான்ஸ்போர்ட் நிறுவனம் கொடுங்கையூர் மாநகராட்சி இடத்தை ஆக்கிரமிப்பு செய்து வாகனம் நிறுத்துமிடம் மற்றும் டிரான்ஸ்போர்ட் தலைமை அலுவலகமாக பயன்படுத்துவது ; . |
| (2) | இவ்வாக்கிரமிப்புக்கு மாநகராட்சி அலுவலர்கள் உடந்தையாக இருப்பது ; |
| (3) | கொடுங்கையூர் கட்டபொம்மன் 1–வது தெருவின் பொது வழியை மிகப் பெரிய அளவில் ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டப்பட்டது. |

2. மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும், அந்நிறுவனத்தில் பணியாற்றிய திரு A.திருமலைக் குமார் என்ற பணியாளருக்குத் தெரிந்ததாலும், நிர்வாகத்தின் சட்டவிரோத செயலுக்கு துணை போகாததாலும் அவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவித்து முறையீட்டு மனுவில் சாட்சியாக அவர் பெயரைக் குறிப்பிட்டு மனு செய்திருந்தார். எனவே, சாட்சி திரு A.திருமலைக் குமார் என்பவரிடம் 25.01.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. சம்பந்தப்பட்ட டிரான்ஸ்போர்ட் நிறுவனம், சென்னை, கொடுங்கையூர், சாஸ்திரி நகர், பிரதான சாலையை ஆக்கிரமிப்பு செய்துள்ளதென்றும், அந்த இடம் யாருக்குச் சொந்தமென தனக்குத் தெரியாது என விசாரணையின்போது தெரிவித்தார். மேலும், மேற்குறிப்பிட்ட நில உரிமை குறித்து தனது கட்சிக் காரரும் முறையீட்டு மனுதாரருமான திரு T. ராஜமாணிக்கம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விவரம் கோரியுள்ளார்

என்றும், ஒரு மாதத்தில் பதில் கிடைக்கும் எனவும் விசாரணையின்போது குறிப்பிட்டார். தனக்கு எழுதப்படிக்கத் தெரியாததால் திரு T. ராஜமாணிக்கம் மூலமாக மனு அனுப்பியதாகவும் குறிப்பிட்டார்.

3. திரு A. திருமலைக்குமார் மேற்குறிப்பிட்ட டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தில் ஐந்து ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். அவர் பணியாற்றிய நிறுவனம், நில ஆக்கிரமிப்பை செய்துள்ளதைக் குறிப்பிட்டு திரு T. ராஜமாணிக்கம் என்பவர் மூலமாக சென்னை மாநகராட்சிக்கும் இம்முறைமன்ற நடுவத்திற்கும் ஆக்கிரமிப்பினை அகற்றக் கோரி முறையீடு செய்யப்பட்டுள்ளது, ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ள நிலம் சென்னை மாநகராட்சிக்கு உரிமையானதா அல்லது தனியாருக்கு உரிமையானதா என்பதை உறுதி செய்யாமலேயே, சாட்சியாளர் திரு A. திருமலைக்குமார் தெரிவித்த தகவல்களின் அடிப்படையில் திருநெல்வேலியில் வசிக்கும் மனுதாரர் திரு T. ராஜமாணிக்கம், கொடுங்கையூரில் செயல்பட்டு வரும் மேற்குறிப்பிட்ட நிறுவனம் குறித்த ஆக்கிரமிப்பு புகாரினை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துள்ளார்.

4. நில உடமை குறித்து போதுமான விவரங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படாமல் ஆக்கிரமிப்பினை அகற்றக் கோரி இம்முறைமன்ற நடுவத்திற்கும், சென்னை மாநகராட்சி ஆணையருக்கும் மனுதாரர் முறையீடு செய்து கொண்டது ஏற்புடைய செயல் அல்ல. எனவே, நடவடிக்கை எடுக்கக்கோரும் நிகழ்வுகள் சம்பந்தப்பட்ட ஆவண நகல்களுடன், விசாரிக்கப்படவேண்டிய சாட்சியாளர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு முறையீட்டு மனுக்களை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும் என மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள பொதுப்பணியாளர்கள் சம்பந்தப்பட்ட ஊழல் மற்றும் நிர்வாகச் சீர்கேடான இனங்கள் குறித்த நேர்வுகளை மட்டுமே இம்முறைமன்ற நடுவத்தின் நடவடிக்கைக்கு முறையீடு செய்யலாம் என முறையீட்டு மனுதாரருக்கு அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 9–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

15/2/18

செயலாளர்.

15/2/18

15/2/18

பெறுநர்

1. திரு T. ராஜமாணிக்கம்,
463– K.M. காம்ப்ளக்ஸ்,
பெரியார் நகர்,
சுத்தமல்லி,
திருநெல்வேலி – 627 604.

2 திரு. A. திருமலைக்குமார்,
4/72, மாரியம்மன் கோயில் தெரு,
சுத்தமல்லி, சுத்தமல்லி அஞ்சல்,
திருநெல்வேலி – 627 604.

3 மாநகராட்சி ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் கட்டிடம், சென்னை – 600 003.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்